விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | ஆனி 26 | ஷவ்வா 21 | இதழ் 150
யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 10-7-1985

## பூட்டான் பேச்சுவார்த்தை எதிரொலி

# மக்களும் மாணவரும் ஒன்றுதிரண்டு யாழ். நகரில் மாபெரும் ஊர்வலம்!

(யாழ்ப்பாணம்)

பூட்டான் பேச்சுவார்த்தையை எதிர்த்து நான்கு திசைகளாலும் மக்களும், மாணவர்களும் நேற்று யாழ். நகரை முற்றுகையிட்டு சுலோக அட்டைகளுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினார்கள்.

காலையில் ஆரம்பமாகி நகரவீதிகள் வழியாகச் சென்று மாலைவரை நடைபெற்ற இப்பிரமாண்டமான ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கில் மக்களும் மாணவர்களும் பங்கு பற்றினார்கள்.

யாழ். நகரிலுள்ள கல்லூரி மாணவர்கள், காலையில் சுலோக அட்டைகளுடன் அணிவணியாக நகரவீதிகளில் ஊர்வலமாக புறப்பட்டார்கள்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து புறப்பட்டு, யாழ்நகரை நோக்கி சுலோக அட்டைகளுடன் உச்சிவெய்யிலையும் பொருட்படுத்தாமல் உணர்ச்சிமயமான ஒரு ஊர்வலத்தை நடத்தினார்கள். யாழ். ஆயுர்வேத கல்லூரி மாணவர்கள், 'ரியுசன்' வகுப்பு மாணவர்களும் இந்த ஊர்வலங்களில் கலந்துகொண்டார்கள்.

நகர வீதி மின்கம்பங்களில் எல்லாம், பூட்டான் பேச்சுவார்த்தையை எதிர்க்கும் சுலோக அட்டைகள் தொங்கவிடப்படிருந்தன.

அரியாலையிலிருந்து நேற்றுக்காலை புறப்பட்ட மற்றொரு மாபெரும் ஊர்வலத்தில் 6வயது சிறுவன் முதல் 60 வயது தாத்தாவரை பெருந்திரளான பெண்கள் உட்பட, மாணவர்களும் சேர்ந்து கொண்டார்கள்.

ஐந்து வயதுகூடப் பூர்த்தியாகாத பிஞ்சுக்குழந்தைகள், அரிவரி பயிலும் மழலைகள், தெருவழியாக தூக்கமுடியாத சுலோக அட்டைகளைக் கையில் ஏந்தியபடி, சென்ற காட்சி மனதை உருகச்செய்வதாக இருந்தது.

''பங்காளர் வேண்டும், பார்வையாளர் வேண்டாம்'' என்று ஊர்வலத்தினர் குரல் எழுப்பி வந்தபோது, பார்த்துக்கொண்டு நின்ற பலர்

(7-ம் பக்கம் பார்க்க)

## உலகக் கவனத்தைக் கவர்ந்துள்ள

# 'திம்பு' பேச்சுக்களில் விரைவான தீர்வு

### நல்லெண்ணவாதிகளின் விருப்பம் பற்றி 'இந்து' பத்திரிகை

(புதுடில்லி)

பிராந்திய, சர்வதேசிய கவனத்தை ஈர்த்துள்ள 'திம்பு' பேச்சுவார்த்தைகள் விரைந்து முன்னேற்றம் காணவேண்டுமென்பது நல்லெண்ணம்கொண்ட அனைவரதும் விருப்பமாகும் என சென்னையிலிருந்து வெளிவரும் பிரபல ஆங்கில பத்திரிகையான 'இந்து' தலையங்கம் தீட்டியுள்ளது.

''இப்பொழுது அவர்கள் முன்னுள்ள கஷ்டமான விடயம், தற்பொழுதும் சமீப காலத்திலும் ஏற்பட்ட கசப்புணர்வைப் போக்கிக்கொண்டு இதுவரை இந்தியா உதவியும்கூட ஒரு அர்த்தமுள்ள ஜனநாயக தீர்வினை எற்படுத்த முடியாமல் இருந்துவரும் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றினை ஏற்படுத்தும் வகையில் கலந்துரையாடுவதாகும்'' என்றுகுறிப்பிடும் அத்தலையங்கத்தில், ராணுவ ரீதியில் பிரச்னைக்கு தீர்வுகாண எடுக்கப்பட்ட முயற்சி தோல்விகண்டுள்ளது என்பதும் சுட்டி காட்டப்பட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக பல்வேறு தமிழ் இயக்கங்களுக்கும் தமக்கெனக் குறிப்பிட்ட சிலகருத்துக்கள் உண்டு என்றாலும், ஒருமித்த தமிழ் கருத்தொன்று இருக்கவே செய்கின்றது. அதுவே விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். 'ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மொழி பிராந்தியம்' என்ற கருத்துக்கு அங்கீகாரம் தேவைப்படும். இதன்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரத்தை ஜனநாயக முறையில் ஒப்படைப்பது அல்லது ஏதாவதொரு முறையிலான இணைப்பை ஏற்படுத்தி உண்மையான சுயாட்சிக்கு வழிவகுப்பதாகும், என இந்து பத்திரிகையின் தலையங்கம் குறிப்பிட்டுள்ளது.

## 'திம்பு' பேச்சுவார்த்தை நேற்றும் தொடர்ந்தது

(புதுடில்லி)

திம்புவில் நடைபெறும் இலங்கை இனப்பிரச்னை தீர்வுக்கான மாநாடு நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றது.

திங்கட்கிழமை பூர்வாங்கமாக ஆரம்பமான மாநாட்டில் நேற்று சற்று விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றதாகத் தெரிகின்றது. இலங்கை தமிழ்மக்களின் உரிமைகளுக்கு வழிசெய்யும் புதிய யோசனைகள் சிலவற்றை இந்த மாநாட்டில் இலங்கை முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## நகைகளை இரவல் வாங்கிய கணவன் மனைவி தலைமறைவு!

[கிளிநொச்சி]

அயலவரிடமிருந்து நகைகளை இரவல் வாங்கிய கணவனும் மனைவியும் தலைமறைவாகிவிட்டனராம்.

பூநகரியைச் சேர்ந்த பூசகர் ஒருவரும் அவரது மனைவியுமே இவ்வாறு நகைகளை இரவல் வாங்கிக்கொண்டு தலைமறைவாகிவிட்டதாக கிராம சேவகரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஒரு மாத காலத்திற்கு முன் இரவல் வாங்கிய நகைகளின் பெறுமதி சுமார் ஒரு லட்சம் ரூபா எனவும் கூறப்பட்டது.

## இவர்களுக்கு பட்டதாரி சம்பளம் வழங்கப்படும்

### மகாசிவம் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் 84-ம் ஆண்டுக்குமுன்னர் சங்கீதத்தில் அல்லது நடனத்தில் நான்கு வருடகால டிப்ளோமாவை முடித்துப்பட்டம் பெற்ற சகல ஆசிரியர்களுக்கும் பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

மேற்படி ஆசிரியர்களுக்கு 85 ஜனவரியிலிருந்து பட்டதாரிச்சம்பளம் வழங்குமாறு கல்வி அமைச்சு கிளிநொச்சி கல்விப்பணிப்பாளரைப் பணித்துள்ளதாகவும் திரு. மகாசிவம் சொன்னார்.

82ம், 83ம், 84ம் ஆண்டுகளில் பல ஆசிரியர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் சங்கீத-நடன ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவ்வகையான ஆசிரியர்களுக்கு தயரத்தின சம்பள மீளாய்வுக்கமிட்டியின் சிபார்சின் பிரகாரம், பட்டதாரி ஆசிரியர்களுக்குச் சமமான வேதனம் வழங்கப்படவேண்டுமென அமைச்சு சுற்றுநிருபம் அனுப்பியும் கிளிநொச்சி கல்வி அலுவலகம் இவ்

[7-ம் பக்கம் பார்க்க]

## ஜே. ஆர். சுகவீனம்

(கொழும்)

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன சிறிது சுகவீனமுற்று இருப்தால் அடுத்த சில தினங்களுக்கு பொது நிகழ்ச்சிகள் எதிலும் கலந்து கொள்ளமாட்டார் என்று ஜனாதிபதி செயலகம் நேற்று தெரிவித்தது

## குறைந்தபட்ச நோக்கமும் தமிழ்ஈழம்தானும்!

### புதுடில்லியில் ஈரோஸ் தலைவர்

(புதுடில்லி)

''தமிழ்த்தீவிரவாதிகளின் குறைந்தபட்ச நோக்கமும் அதிகபட்ச நோக்கமும் ஈழமாகவே இருக்கும்'' என்று (ஈரோஸ்) இயக்கத்தின் தலைவர் திரு. பாலகுமார் திம்பு பேச்சுவார்த்தைகள் தொடர்பாக பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் கூறியுள்ளார்.

திம்பு பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக தங்கள் சார்பில் எதுவித நிபந்தனையும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் அவர் சொன்னார். ஈழமக்கள் தேசிய விடுதலை முன்னணியின் சார்பில் அவர் கருத்து தெரிவித்தார் தங்கள் சார்பில் இப்போதைய பேச்சுக்களில் யோசனைகள் எதுவும் முன்வைக்கப்படமாட்டாது என்றும், ஆனால் இலங்கை அரசு முன்வைக்கும் யோசனைகள் என்னவென்று அறிய முற்படு

( ) பக்கம் பார்க்க)

## பிதா. சிங்கராயரை இவ்வாறு மிரட்டினார்களாம்:

# "ஒத்துழைக்காவிடில் உங்கள் தாயாரையும் கொண்டுவருவோம்"

(கொழும்பு)

''நீங்கள் எங்களுடன் ஒத்துழைக்கவில்லை உங்களுடைய சகோதரரை இங்கு கொண்டு வந்திருக்கிறோம். இனிமேல் உங்கள் தாயாரைக் கொண்டுவரவும் தயங்கமாட்டோம்' இன்ஸ்பெக்டர் காலகே எனது அறைக்கு வந்து இவ்வாறு கூறினார்.

வண பிதா சிங்கராயர் நேற்று கொழும்பு மேல் நீதி மன்றத்தில் நடைபெறும் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் வழக்கில் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார் சிரேஷ்ட சட்டத்தரணி பாலாதம்பு சாட்சியத்தை நெறிப்படுத்தினார்.

வண. சிங்கராயர் மேலும் கூறியதாவது:-

சில நிமிடங்களின் பிறகு உத்தியோகஸ்தர் ஒருவர் வந்து பொருட்களுடன் வந்து ஆயத்தமாகும்படி கூறினார். வெளியே இருந்த கார் ஒன்றுக்கு அழைத்துச்செல்லப்பட்டேன். பொழுதுபோக்கு கூடத்தைத் தாண்டும்போது எனது மூத்த சகோதரர் ஞானப்பிரகாசத்தைக் கண்டேன். வேறு உத்தியோகத்தர்கள் அவரை விசாரித்துக் கொண்டிருந்தனர். பிதா சின்னராசா அமர்ந்திருந்தார்.

(7-ம் பக்கம் பார்க்க)

## தாராளமாக எரிபொருள்

[யாழ்ப்பாணம்]

யாழ். ஐக்கியவியாபாரசங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் நேற்று வழக்கமான விலைக்கு எரிபொருள் வழங்கப்பட்டன.

பெற்ரோல் நிரப்புவதற்காக வாகனங்கள் நீண்ட வரிசையில் காணப்பட்டன.

## நேற்று நடந்த குண்டுவெடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பூங்காப்பக்கமாக நேற்று இரு குண்டுவெடிப்புச் சத்தங்கள் கேட்டன இச்சம்பவத்தினால் யாழ் நீதிமன்ற கதவுக்குச் சிறு சேதமேற்பட்டதாக தெரிகிறது

நேற்றுக் காலையில் இடம்பெற்ற இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து நீதிமன்ற விசாரணைகள் நிறுத்தி வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது

பலத்த சத்தத்துடன் இக்குண்டுகள் வெடித்ததால் அவ்வட்டாரத்தில் சற்று பதற்றம் தென்பட்டது. (மா)

# விளம்பரம்

## விற்பனைக்கு

கால் நடைகளுக்கு உகந்த பெக்கூட்ரின் பவுடர் (Pecutrin pd ) மொத்த விலை-7-50 சில்லறை விலை - 8-50 தொடர்புகொள்க: M G M. Forage Stores, 781. K K S. Rd and 208, 1st Cross Street, Jaffna 4289

சோடா போத்தல் மூடி அடைக்கும் மெசின் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: நாமகள் ஸ்ரோர்ஸ், 341. பருத்தித்துறை வீதி நல்லூர் அரசடி சந்தி. 4308

அச்சகம் ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:சி ஜி எஸ். அச்சகம், சித்தங்கேணி வீதி, வடலியடைப்பு. 4288

மானிப்பாய் வீதிக்கு அண்மையில், ஆனைக்கோட்டை ரோட்டில், பாரதி சனசமூக நிலையத்திற்கு முன்னால்தெற்கே செல்லும் தெருவில் .25 யார் தூரத்தில் ஒன்றரை(1½)பரப்பு வீடு கட்டக்கூடிய சதுரக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: ம. நாகரத்தினம், 'கோகுலம்', குளப்பிட்டிச் சந்தி கே கே எஸ். வீதி. கொக்குவில். 4320

## தேவை

இறைச்சிக் கோழிகள் (BROILERS) தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அண்ணா பாம், இணுவில், செம்மா தெரு, யும்மா மொஸ்க் லேன் யாழ்ப்பாணம். தொலைபேசி: 23412. 23413 4316

## தேவை

றேடியோ திருத்துபவர் தேவை. நேரில் காலை 8 மணி முதல் 5 மணிக்குள் வரலாம். ரெலிகோணர், மொடர்ன் மாக்கற், சாவகச்சேரி. 4159

## வாடகைக்கு

கொக்குவில்லில் நல்ல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு 194 'A' காரை நகர்வீதி, கொட்டடி விலாசத்துடன் சனி, ஞாயிறு தொடர்பு கொள்க. 4302

## விற்பனைக்கு

Shetna Farm B-380 சேவற் குஞ்சுகள் 13 ம் திகதி சனிக்கிழமை விநியோகிக்கப்படும் சற்குணராசா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 4324

## வகுப்புகள்

108 Brown Road Jaffna A/L 87 இரசாயனம் சத்தீஸ் ஆரம்பம் 10-7-85 (புதன்) திங், புதன் 4-30 P M, சனி, ஞாயிறு 3-15 p M ஆரம்பம்:- 13-07-85. 4306

## வாடகைக்கு

கோண்டாவில் கிழக்கு, இருபாலை வீதி, தண்ணீர்த் தாங்கிக்கு முன் புதிய மாடி வீடு வாடகைக்கு உடன் உண்டு. தொடர்பு கொள்ளவும்: ந. குணநாயகம், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 4315

## பாராட்டு

(யாழ்ப்பாணம்)

புனித பத்திரிசியார் கல்லூரியில் 'குடும்ப விழா' கடந்த 3ம் திகதி கொண்டாடப்பட்டது.

அவ்விழாவில் அக்கல்லூரியில் 25 வருடங்கள் சேவையாற்றிய திருவாளர் அல்பேட் சந்தியாப்பிள்ளை, எஸ். எ. அகஸ்ரின், திருமதி சேவியர் ஆகியோருக்குசேவைநிறைவை நினைவுகூருமுகமாய் மாணவரால் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடாத்திக் காண்பிக்கப்பட்டன. மேலும் ஆசிரியர் மூவரின் சேவைச் சிறப்பையும் தொண்டையும் அதிபர், ஆசிரியர், மாணவர் அனைவரும் பாராட்டினர்.

## முதலிடம்

(கல்வியங்காடு)

யாழ்ப்பாணம்புனித சாள்ஸ் மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் யாழ். கல்விவட்டார அதிகாரி திரு. எஸ். சிவநாதனினால் கொடியேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

திருமதி சிவகுருநாதன் பரிசில்களை வழங்கினார். தனிநாயசம் அடிகளார் இல்லம் முதலாவதாகவும் 2ம், 3ம் இடங்களை முறையே வீரமாமுனிவர் இல்லமும், ஞானப்பிரகாசர் இல்லமும் பெற்றன. விளையாட்டுச் செயலளர் ஜெ. யேசுதாசன் நன்றி கூறினார்.

## மணப்பந்தல்

இந்து வேளாளர் இன அரசாங்க எழுதுவினைஞர் சேவையிலுள்ள 38வயதான ஆணுக்கு ஓரளவு அழகுள்ள மணமகள் தேவை. சீதனம் வசதிக்கேற்ப கொடுக்கலாம். மணமகள் பொதுவாக மச்சம், மாமிசம் உண்பதில்லை. சாதகக்குறிப்பு, உயரம், (விரும்பினால் புகைப்படம்) மற்றும் விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். புகைப்படம் உடனே திருப்பி அனுப்பப்படும். விளம்பர இல: 4242 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 4242

வெளிநாட்டில் வேலை பார்க்கும் யாழ். பண்டார இனத்தைச் சேர்ந்தவருக்கு கற்ற அழகுள்ள 33 வயதுக்குட்பட்ட வசதிக்கேற்ற சீதனத்துடன் சமமான இனத்தையுடைய மணமகள் உடன் தேவை: தொடர்பு: விளம்பர இல: 4314, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4314

## உ
## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் குரோதன வருடம், ஆனித்திங்கள் 27-ம் நாள் (11-07-1985) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி முதல் 6 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் எமது ஏக புத்திரி

விஜேயந்தினிக்கும் (ராசாத்தி)
தம்பிப்பிள்ளை அமிர்தலிங்கத்துக்கும்

பழம் ரோட், சித்தி விநாயகர் ஆலயத்தில் திருமணம் செய்ய நிச்சயித்திருப்பதால், அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

(தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை)

தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி. லீலா விஜயநாதன்,
156/1, அரசடி வீதி,
கந்தர்மடம் — யாழ்ப்பாணம் 4317

## Norway — Norway — Norway

நோர்வே (NORWAY) விமான பயணச் சீட்டுக்கள் குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நேரடிப் பயணங்கள்

Colombo — Oslo / Bergen

ஆலோசனைகளும் வழங்கப்படும

உடனே தொடர்புகொண்டு முன்கூட்டியே ஆசனங்களை பதிவு செய்துகொள்ளுங்கள்.

மனேஜர்
ஏபெக் ஏஜென்சிஸ்
APEX AGENCIES
M P C S BUILDING
K K S ROAD, JAFFNA.
யாழ்ப்பாணம் 4325

## எவர்சில்வர்ப் பாத்திரங்கள்!

யாழ் நகரில் எல்லாவிதமான 'சங்கு மார்க்' எவர்சில்வர்ப் பாத்திரங்களை மொத்தமாகவும், சில்லறையாகவும், மிகக்குறைந்த விலையில் தெரிவு செய்ய தலைசிறந்த ஒரே ஸ்தாபனம்.

செல்லாசன்ஸ் சேல்ஸ் சென்ரர்,
118, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

"வியாபாரிகளுக்கு அதிவிசேட கழிவுண்டு"

## 7வது ஆண்டு நினைவஞ்சலி

நல்லூர், செட்டித் தெருவைச் சேர்ந்தவரும்
மானிப்பாயில் வசித்தவருமான
உயர்திரு
டாக்டர் சரவணமுத்து சோமசுந்தரம்

| மலர்வு | உதிர்வு: | திதி: |
| --- | --- | --- |
| 2-11-1912 | 27-6-1978 | 10-7-1985 |

அன்பின் திருவுருமாய் பண்பின் சிகரமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
அணைந்துவிட்ட அன்புத் தெய்வமே
இன்று உங்கள் ஆத்மா சாந்தியடையப்
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் அன்பின்

மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்கள்,
மைத்துனர், பேரப்பிள்ளைகள்.

டாக்டர் C. C. S. ராஜன்,
"கிருஷ்ணா கிளினிக்",
ஆஷாத் வீதி, யாழ்ப்பாணம்.

4307

## O/L Day Classes

ஆரம்பம்:
10-07-85
காலை- 8-30
விபரங்கட்கு:
நிரு டியூசன் சென்றர்
புகையிரதநிலைய வீதி,
கோண்டாவில். (4310)

## பகிரங்க வேண்டுகோள்

24-05-85 அன்று, எமது தொழிற்சாலையின் வெள்ளை நிற டெலிகா 38 ஸ்ரீ 700 இலக்கம்கொண்ட வானை தொழிற்சாலையின் கதவுகளை பலவந்தமாக உடைத்து ஐந்து நாட்களில் அதனைத் திருப்பித் தருவதாக கூறிஓர் கோஷ்டியினர் கடத்திச்சென்றனர். ஆனால் இதுவரையில் வான் திருப்பி ஒப்படைக்கப்படவில்லை.

தொழிற்சாலையின் அத்தியாவசியத் தேவைகளையும் உற்பத்திகளின் விற்பனைகளையும் இவ் ஒரேயொரு வாகனமே அச்சாணி போன்று மேற்கொண்டிருந்தது. இவ்வாகனம் கடத்தப்பட்டதன் காரணமாக தொழிற்சாலை தற்பொழுது பெரிதும் நெருக்கடியான நிலையிலுள்ளது.

இவ்வாகனக் கடத்தல் காரணமாக, தொழிற்சாலையின் ஊழியர்களும், தொழிற்சாலையுமே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஆகவே வாகனத்தைக் கடத்திச் சென்றவர்கள் அதனை உடனே திருப்பி ஒப்படைக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

வாகனம் ஒப்படைக்கப்படாத பட்சத்தில் வாகனக் கடத்தலை எதிர்த்து பத்திரிகைகளில் அறிக்கை விடும் சம்பந்தப்பட்ட இயக்கங்கள், ஊழியர்களாகிய எமது நலனையும், தொழிற்சாலையின் முன்னேற்றத்தையும் கருத்திற் கொண்டு உதவுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படிக்கு
தொழிற்சாலை நிர்வாகஸ்தர்களும் ஊழியர்களும்.

செல்சன்ஸ் மெட்டல் இன்டஸ்றி,
இராஜ வீதி,
திருநெல்வேலி. 4322

## யாழ். நகரில் புகழ்பெற்ற நிறுவனம்

கடந்தகால பரீட்சைப் பெறுபேறுகள் எடுத்துக் காட்டு

எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்,
இருபாலை — கோப்பாய்.

THE EXPRESS INSTITUTE KOPAY

O/L Dec. 85க்கான 5மாத துரித மீட்டல் வகுப்புகள்.

பகல் முழு நேர வகுப்பு (முற்றிலும் பாடசாலை போன்ற வசதிகளுடன்)

யூலை 10-ல் ஆரம்பம்

# ஸிம்பாப்வே தேர்தல் கலவரங்களில் ஆண், பெண் வன்முறைக்கும்பல்!

ஹரேரே ஜூலை 9

ஸிம்பாப்வேயில் கடந்தவாரம் இடம் பெற்ற பொதுத்தேர்தலைத் தொடர்ந்து இங்கு பெரும் கலகங்கள் மூண்டுள்ளன. இக் கலகங்களில் ஆண்களுடன் பெண்களையும் உள்ளடக்கிய வன்முறைக் கும்பல்கள் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றன. இக்கலகக் காரர்கள்தேர்தலில் பெரும்பான்மைவெற்றி பெற்ற பிரதமர் திரு. றொபேர்ட்முகாபே யின் ஆதரவாளர்கள் என்று தெரிவிக்கப் பட்டது

ஹரேரே நகரிலேயே கலகங்கள் வெடித்தன ஆண்களுடன் பெண்களையும் உள்ளடக்கிய வன்முறையாளர்கள் கூட்டம் சிறுபான்மைக்கட்சி ஆதரவாளர்களைக் கடுமையாகத் தாக்குகின்றன என்று கூறப்பட்டது

இத்தாக்குதல்களினால் பெருமளவு சிறுபான்மைக்கட்சி ஆதரவாளர்கள் மோசமாகக் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

வீடுகள், வர்த்தக நிலையங்கள் முரட்டுத்தனமாக சேதப் படுத்தப்படுவதுடன் அவற்றிலிருந்த உடைமைகள் சூறையாடப்பட்டும் தீயிடப்பட்டும் வருகின்றன. இக்கலகக்கும்பல் வீடுகளின் உள்ளேபுகுந்து அங்கிருப்பவர்களை பலாத்காரமாக வெளியேற்றிய பின்னர் பொருட்களைச் சூறையாடிச் செல்கின்றன என்று கூறப்பட்டது.

ஸிம்பாப்வே பிரதமர் திரு. முகாபே தாம் ஒரு தனிக்கட்சி சோஸலிஸ அரசாங்கம் ஒன்றை அமைக்கப்போவதாக அறிவித்திருந்தார். இதற்கு சிறுபான்மைக்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்தே கலவரங்கள் ஏற்பட்டன.

ஸிம்பாப்வேயின் பிரதான எதிர்க்கட்சித்தலைவர் திரு என்கோமா கருத்து வெளியிடுகையில் தமது கட்சியை முழுமையாக நசுக்குவதே திரு முகாபேயின் ஒற்றை ஆட்சி அறிவிப்பின் நோக்கமாகும் என்று தெரிவித்துள்ளார். (கி)

## பயிற்றுநர் நியமனம்

(கரவெட்டி)

பனம்பொருள் அபிவிருத்திச் சபையால் முள்ளியானில் அண்மையில் திறந்து வைக்கப் பட்ட பனம் பொருள் பயிற்சி நிலையத்திற்கு பயிற்றுநராக செல்வி எஸ். பவானி நியமிக் கப்பட்டுள்ளார்.

கரவெட்டியைச் சேர்ந்த இவர் தமிழகத்தில் பயிற்சி பெற்று அண்மையில் தாயகம் திரும்பியவராவார்.

## வவனியாவில் கொள்ளை

[கொழும்பு]

வவனியாவிற்கு அண்மையில் உள்ள பெற்ரோல் நிலையமொன்றில் ஆயுதம் தாங்கிய இளைஞர்களினால் 20,000 ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்று அரசாங்க செய்திகள் தெரிவிக்கின்றன.

## "பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களுக்கு இந்த பயிற்சி நிலையம் வரப்பிரசாதம்"

### ஆசிரியர் சங்க கூட்டத்தில் அமைச்சர் வின்சன்ட்பெரேரா

(கொழும்பு)

அகில இலங்கை ஆசிரியர் சங்கம் ஆசிரியர்களின் உரிமைகளைப் பெற குரல் எழுப்பும் அதே வேளையில் வருங்கால சமுதாயத்தின் நலனிலும் அக்கறை கொண்டுள்ளது இது சங்கத்தின் மனப்பான்மையை எடுத்துக் காட்டுகிறது' என அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 65-வது வருடாந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய பாராளுமன்ற விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வின்சன்ட் பெரேரா தெரிவித்தார்.

அகில இலங்கை ஆசிரியர் சங்கத்துக்கு என அமைக்கப் பட்ட புதிய செயலகத்தில் கடந்த சனிக்கிழமை காலை 65-வது வருடாந்த கூட்டம் நடைபெற்றது.

அமைச்சர் வின்சன்ட் பெரேரா தொடர்ந்து பேசுகையில் 'போராட்டம் என்றால் கூட்டம் கூடி கோஷம் எழுப்புவது அல்ல. பேச்சு வார்த்தைப் போராட்டம் மூலம் கோரிக்கைகளை வென்றெடுக்கலாம்.

தனியார் பாடசாலைகளின் முன்னேற்றம் கருதி என்னால் முடிந்த உதவிகளை நான் செய்யத்தயாராக உள்ளேன்.

இப்புதிய கட்டத்தில் பாடசாலையை விட்டுவெளியேறிய மாணவர்களுக்கு பயிற்சி நிலையம் அமைப்பது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

சங்கத்தின் தலைவர் திரு. ஏ. ஜே. டேனியல் வரவேற்புரை நிகழ்த்தினார் திருமதி திரு டயனு ஜயசுந்தர நன்றி கூறினார்.

பாடசாலை ஆசிரியர்களின் சம்பளம் தொடர்பாக ஆராய்ந்த திரு டி. ஜி தயாரத்தன கமிட்டி அறிக்கையை வெளியிடவேண்டும் என்ற தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## ★ தமிழர் வரலாறு

# கடலாய்வுக்கு ஒரு விசேட கப்பல்!

(சென்னை, ஜூலை 9)

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் கடல் பகுதியில் தமிழர் வரலாறுகள் குறித்த கடலாராய்ச்சிகளை மேற்கொள்ளவுள்ளது. இதற்கென இப் பல்கலைக்கழகம் ஒரு விசேட ஆராய்ச்சிக் கப்பலொன்றையும் வாங்கவுள்ளது

தென் இந்தியாவின் பாம்பன், மண்டபம், இராமேஸ்வரம், தொண்டி ஆகிய பகுதிகளிலேயே இக்கடலாய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடங்கள் பண்டைய தமிழராட்சியில் அரசியல், வர்த்தக, சமயத்துறைகளில் பெருமளவு சம்பந்தப்பட்டிருந்தன.

எனவே இதுகுறித்த சின்னங்கள், மற்றும் ஏனைய வரலாற்றுத் தகவல்கள் என்பனவற்றைக் கடல்கொண்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இதனையடுத்தே இப்பகுதிகளில் கடல் ஆய்வு செய்ய முடிவுசெய்யப் பட்டுள்ளது

இந்த ஆய்வுத் திட்டத்துக்கென சுமார் 40 லட்சம் ரூபாவை தஞ்சைப் பல்கலைக்கழகம் ஒதுக்கியிருப்பதுடன், இந்நிதியில் விசேட ஆராய்ச்சிக் கப்பல் ஒன்றையும் பெறமுடிவு செய்துள்ளது.

இக்கப்பலில் இருந்து கடல் ஆய்வுகளை மேற்கொள்ளும் வகையில் விசேடமாக மாணவர்கள் தஞ்சைப் பல்கலைக் கழகத்திலிருந்து தேர்தெடுக்கப்படவுள்ளனர். அவர்களுக்கு இந்த ஆய்வுக்கான பயிற்சிகளை வழங்கும் வகையில் கடற்படை, மற்றும் ஏனைய ஆராய்ச்சித் துறைப் பிரிவினர்களது உதவி கிடைக்கவுள்ளது.

இத்தகவல்களை தஞ்சைப் பல்கலைக் கழக துணைவேந்தர் திரு. வி. ஏ. சுப்பிரமணியம் தெரிவித்தார். (கி)

## ஆர்ஜன்டீனா மீதான பிரிட்டனின் இறக்குமதி

# தடை நீக்கம்!

லண்டன், ஜூலை 9

ஆர்ஜன்டீனா மீதான இறக்குமதித்தடையை பிரிட்டன் நீக்கியுள்ளது.

கடந்த நான்கு வருடகாலமாக ஆர்ஜன்டீனாவுடன் கொண்டிருந்த பகைமையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையிலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது

1982-ம் ஆண்டு 'போக்லண்ட்தீவு' தொடர்பாக பிரிட்டன் ஆர்ஜன்டீனாவுடன் யுத்தத்தில் குதித்தது. இதனையடுத்து அந்நாடுமீது இறக்குமதித்தடைகளையும் பிரிட்டன் விதித்தது

82ம் ஆண்டுக்கு முன்னைய ஆண்டில் பிரிட்டன் சுமார் 114 கோடி பவுண்கள் பெறுமதியான இறக்குமதியை ஆர்ஜன்டீனாவிலிருந்து மேற்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது இந்த இறக்குமதியில் அதிகமானவை உணவுப் பண்டங்களாகும்.

பிரிட்டனின் இறக்குமதித் தடை நீக்கம் குறித்து ஆஜன்டீனா இதுவரை எதுவித கருத்துக்களையும் வெளியிடவில்லை.

இதேவேளை போக்குவரத்து தொழில்நுட்பம், வர்த்தகத் துறைகளில் பிரிட்டன் ஆர்ஜன்டீனாவுடன் சுமுகமான தொடர்புகளை வைத்துக்கொள்ளும் என்றும் பிரிட்டனின் வெளிநாட்டமைச்சு தெரிவித்தது

ஆயினும் போக்லண்ட் தீவுகள் குறித்த விடயத்தில் பிரிட்டன் தனது நிலையை விட்டுக்கொடுக்காது என்றே தெரிக்கப்பட்டது. (கி)

## அமெரிக்கா மீதான பயங்கரவாதம்

# ஐந்து நாடுகள் மீது றீகன் பலத்த கண்டனம்!

வாஷிங்டன், ஜூலை 9

அமெரிக்காவுக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக ஈரான் லிபியா, கியூபா, வடகொரியா, நிக்கரகுவா ஆகிய ஐந்து நாடுகளையும் அமெரிக்க அதிபர் திரு. றீகன் கடுமையாகத் தாக்கிப் பேசியுள்ளார்

இந்நாடுகளை சர்வதேசப் பயங்கரவாதிகளின் புகலிடங்கள் என்றும் திரு. றீகன் குறிப்பிட்டுள்ளார்.

வாஷிங்டனில் சட்டத்தரணிகள் சங்கமொன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கு எதிரான பயங்கரவாதத்தை இந்நாடுகள் தூண்டி வருவதுடன் சர்வதேச பயங்கரவாதிகளுக்கு ஆயுத, நிதி உதவிகளுடன் இந்நாடுகள் புகலிடமளித்துவருகின்றன அவர் எனவும்தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கு எதிரான பயங்கரவாதம் அதிகரிக்குமானால் அமெரிக்கா தொடர்ந்து பொறுமையுடனிருக்காது எனவும் திரு. றீகன் எச்சரித்தார்.

மேற்குறிப்பிட்ட ஐந்துநாடுகள் சோவியத்யூனியனுடன் நெருங்கிய உறவுவைத்திருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

திரு. றீகன் மேலும் சர்வதேசப் பயங்கரவாதத்துக்கு எதிராக மேற்கத்திய நேச நாடுகளையும் தம்முடன் சேர்ந்து கொள்ளும்படி கேட்டுக்கொண்டார்.

## சவூதியில் மூன்று யாழ் இளைஞர்கள் வேலை நீக்கம்

(சவூதியில் இருந்து எம சுரேந்திரன்)

சவூதி அரேபியாவின் தலைநகரான றியாட்டில் உள்ள கம்பனி ஒன்றில் பணியாற்றிய யாழ்ப்பாண இளைஞர் மூவரின் வேலை பறிபோனது இதனால் இவர்கள் மூவரும் இலங்கைக்கு அனுப்பிவைக் கப்பட்டனர்.

றியாட் நகருக்குள் மன்புவா கடீம் என்னும் இடத்தில் உள்ள கம்பனியில் பணியாற்றிய தும்பளை, கரவெட்டி, கீரிமலை ஆகிய இடங்களைச் சேர்ந்த மூவரே இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டவர்களாவர்.

பிரஸ்தாப மூவரும் பிரச்சினைக்குள்ளானவர்களாக கருதப்பட்டதாலேயே கம்பனி இவர்களை அனுடபநடவடிக்கை மேற்கொண்டதாக தெரிவிக் கப்பட்டது

பிரஸ்தாப கம்பனியில் நூற்றுக்கும் அதிமகான யாழ்ப் பாண இளைஞர்கள் பணியாற்றிவருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஊர்காவல் படைக்கு பயிற்சி

(கொழும்பு)

பாகிஸ்தானில் பயிற்சி பெறுவதற்காக இலங்கையிலிருந்து 250 ஊர்காவல்படையினர் அனுப்பபடவுள்ளனர்

இத்தகவலை அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

### மணி வாக்கு

உலகமே என் தேசம், நன்மை செய்வதே என் சமயம்.

— தாமஸ்பெய்ன்

## நமது நோக்கு

# குடை தேவை; மழை வெளிக்கவில்லை

அகால மரணத்துக்கு ஆறு மாதம் காத்திருந்தே அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம் செய்வது சைவர்களின் வழக்கமாயிருந்துவந்தது.

இன்றைய வேக வாழ்க்கையில் அந்தக் கால எல்லை 41 நாட்களாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய சாந்திக் கிரியைகள் எத்தனை பேருக்கு இன்று நடந்திருக்கிறது. வரலாறு உண்மைப் புள்ளி விபரங்களை வெளியிட வேண்டும்;

காணமற் போனவரும் நிச்சயம் நிலனுக்கும் தீக்கும் இரையானவரும் எத்தனைபேர் என்று கணக்கெடுப்பது இலகுவனதல்ல; ஆனல் கட்டாயம் நிறைவேற்றப்படவேண்டிய பணி.

போர் நிறுத்தம் என்ற ஏற்பாட்டை எவரும் பரிகாசம் செய்வது விவேகமாகாது; இந்த இடைவெளியில், இதுகாறும் நாம் பட்டபாட்டுக்கும் கெட்ட கேட்டுக்கும் விமோசனம் உண்டா என்பதை பொறுமையுடன் அவதானிப்பது ஒவ்வொருவரின் தலையாய கடன்

எப்போது மழை ஓயும், குடையைச் சுருக்கிக் கக்கத்தில் வைத்து எங்கள் நாளாந்த பணியில் தாராளமாகத் தொடரலாம் என்று நினைப்பவர்கள் இன்றைய போராட்டத்தின் பெருமையைக் கணிக்க முடியாத கோடரிக் காம்புகள்.

அதே மாதிரி தமிழ் இளைஞர்கள் போராட்டத்தை மதித்து போராளிகளின் பிரதிநிதிகளுக்கு இடமளிக்க இலங்கை அரசு முன்வந்தபோது, 'பயங்கரவாதிகள்' என்ற நாமகரணம் தொடர்வது எதற்காக?

மீனும் வேண்டும் காலும் நனையப்படாதென்ற பாங்கில் கரையில் தத்தளிக்கும் பூனை போல, அரசின் அமைச்சர்களும், அரச பத்திரிகைகளும் முரண்பட்ட முயற்சியல் நாவையும் பேனையையும் காக்கமுடியாது தடம்புரளுகின்றனர்.

இந்தியப் பிரதமரின் முயற்சி இந்திய இலங்கை பயங்கரவாதத்தை முறியடிப்பதே என்பது இன்றைய பிரசாரம்.

என்ன மூடத்தனம்! இலங்கையில் நடப்பது தமிழ் பயங்கரவாதமென்றால் பிரதமர் ராஜீவ் அதனை ஒழிக்க ஏன் இந்தப் பிரயத்தனம்.

இந்தியாவில் பயங்கரவாதம் எவ்வாறு தொழிற்படுகிறது அன்னை இந்திராவின் கொலைபற்றி அகக்கண்ணால் உண்மையை இங்குவாழும் அப்பாவி மக்கள் காணமுடியுமானால் பெற்றெடுத்துபெரும்பெயர் சூட்டி, அறப்பால் ஊட்டிய அன்னையின் கொலை தனயனுக்குப் புரியமுடியாத புதிரா?

எனவே மக்கள் விடுதலைப் போராட்டத்தையும் பயங்கரவாதம் எனத் திரித்துஅரசு தன் ராணுவத்தால், ராணுவமல்லாத காடைத்தனத்தால் ஏற்படுத்திய அழிவுகள் எந்த சமாதான முடிவிலும் தக்க விசாரணைக்கும் நஷ்ட ஈட்டுக்கும் உரியன.

ஹிட்லர் தோல்விகண்டதும் இன்றும் மாயமெனக் கருதப்படும் வகையில் தமக்கு விடுதலை தேடிக் கொண்டார்; ஆனல் அந்த ஒரு மனிதனின் பொறுப்பில் நடந்த அட்டுழியங்களுக்கு யுத்தத்துக்குப் பின் நடந்த 'நியூறன்பேக் விசாரணை' தக்கவாறு தண்டனை வழங்கியது.

தமது 90வது வயதை அணுகி மறியலில் இருக்கும் ஹேர்ஹெஸ் இதற்கு தக்க சான்றுவார்.

எனவே இன்றைய இருளிலிருந்து நாம் வெளியேறி ஒளியைக் காணமுடியுமென்ற நம்பிக்கையில் கைவிளக்கை உடனடியாக அவித்துவிடுவது விவேகமா.

விவேகத்திலும் சொல்வன்மையிலும் எவருக்கும் சளையாத மறைந்த தமிழ்த் தலைவர் விரக்தியடைந்த நிலையில் மிக நெருங்கிய ஆதரவாளர்களுக்கு சொன்னது நினைவுக்கு வருகிறது.

''யாழ்ப்பாணத்தான் குடாநாட்டுக்கு அப்பால் போய் குதிரைவிடுவான். பின்பு அடிவேண்டி வீடுவருவான்; வீட்டிலும் துரத்தப்பட்டு அடிபடுவான்: அசன் பின் சுயாட்சிஎன்றபெயரில் ஒருவருக்கொருவர் அடிபடுவது நம்பிக்கை ''

இந்தக் கணிப்பில் பெரும் பகுதி உண்மையானலும், துப்பாக்கி ஏந்தி தம் உயிரைப் பணயம்வைத்து தமிழ் மக்கள் விடுதலைக்கென ஒரு போராட்டம் இன்று அடைந்திருக்கும் நிலை மேலே குறிப்பிட்ட தீர்க்கதரிசனத்தில் காணப்படவில்லை.

சுதந்திரத்துக்கு இவ்வளவு தியாகம் நிறைவேறியபின், எலும்புத் துண்டுகளுக்கு நாய்கள் அடிபடும் காட்சி என்றுமே நினைக்கமுடியாத முடிவு; இதுவே இன்று நடைபெறும்ஆர்ப்பாட்டங்களின் அர்த்தமாயிருக்கலாம். எந்தவகையிலும் மதிப்புடன் வாழவேண்டுமென்று துணிந்திருக்கும் இளஞ்சந்ததியினர் இப்பெருநோக்கத்தை கைவிடுவரென்று எவரும் மனப்பால் குடிக்கவேண்டியதில்லை.

## கடத்தப்பட்டனர்

(வவனியா)

வவனியாவில் இரண்டு இளைஞர்கள் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத துப்பாக்கி இளைஞர்களினால் கடத்திச் செல்லப்பட்டனர்.

தெய்வகுமார் [22 வயது] இவர் வவனியாவில் பிரபல கடை உரிமையாளரின் மகனாவர். மற்றவர் அஜித் [21வயது] ஆகிய இருவருமே கடத்திச் செல்லப்பட்டவர்களாவர்.

வவனியாவில் இவ்வாறு இளைஞர்கள் கடத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

# தமிழ் ஆசிரியர்கள் மீது சிங்கள அன்பரின் 'குருபக்தி'

**திரு. டபிள்யு. எ. சிறிசேன என்ற ஒரு விஞ்ஞானப் பட்டதாரியான சிங்கள அன்பர், தென்பகுதியில் தமிழ் ஆசிரியர்கள் ஆற்றிய கல்விப்பணியைக் கௌரவித்து எழுதிய கட்டுரை இது**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கணித - விஞ்ஞான ஆசிரியர்கள் தென்பகுதியில் சிங்கள மாணவர்களுக்கு ஆற்றிய சேவை அளப்பரியதாகும்.

அண்மையில் தமது சுயநலம் கருதாது மாணவர்களுக்காகவே உழைத்த ஒரு ஆசிரியர் பற்றிய பாராட்டுக்கட்டுரையொன்று பத்திரிகையில் வெளிவந்திருந்தது.

அக்கட்டுரையைப்படித்ததும் 1940ம் ஆண்டுகளின் ஆரம்பப் பகுதிகளில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் ஆசான்கள் சிங்களப்பகுதிகளில் ஆற்றிய உயர்ந்த கல்விப்பணியே என்கண்முன்வந்து நின்றது.

அக்காலத்தில் இலங்கையின் தென்பகுதி மாவட்டங்களின் இருந்த அரசாங்க மத்திய கல்லூரிகள் இத்தமிழ் ஆசிரியர்களின் சேவையைப்பெரிதும் பெற்றிருந்தன. அப்பாடசாலைகளின் முதலாவது கணித-விஞ்ஞான ஆசிரியர்களும் தமிழர்களே என்பது குறிப்பிடத்தக்கது

திரு பேரின்பநாயகம், திரு. நவரட்ணராஜா, திருவாளர்கள் இரத்தினசபாபதி, ராஜதுரை, சிவசிதம்பரம், மண்டலேஸ்வரன், வேதநாயகம், தம்பிஐயா போன்றவர்கள் இந்தஆசிரியர்களில் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர்

பிரபல கணித ஆசிரியரான திரு. எஸ். இரத்தினசபாபதி நுகவெல மத்திய கல்லூரியில் ஆசிரியராகவும், பின்னர் மாத்தளை அரசாங்கக் கல்லூரியில் அதிபராகவும் கடமையாற்றினர்.

நுகவெல மத்திய கல்லூரியில் நாத் அமரக்கூன் என்ற மாணவன் உயர்தரவகுப்பில் கணிதபாடங்கள் இரண்டிலும் அதிவிசேட சித்தி (A) பெற்றார். அவரின் இந்த வெற்றிக்கு திரு. இரத்தினசபாபதி அவர்கள் வழங்கிய ஊக்கமே. முக்கிய காரணமாக இருந்தது.

மாத்தளையில் தற்போது சிறந்துவிளங்கும்பலபொறியியலாளர்கள், இந்த ஆசிரியரின் கல்விப்பணிக்குப் பெரிதும் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றனர்.

பாடசாலைகளிலும் அவற்றுக்கு வெளியேயும் சனி — ஞாயிறுவார நாட்களிலும், மாலை வேளைகளில் இரவு எட்டு, ஒன்பது மணிவரைகூட அந்த ஆசிரியர் மாணவர்களுக்கு தமது சேவைகளை வழங்கினர்.

இத்தகையவேளைகளில் பாடசாலை மேசைகள் மீதே வகுப்புக்களைமுடித்துக் கொண்ட பின்னர் அவர் உறங்கிவிடுவதும் வழக்கம். தொடர்ந்து மறுநாட்காலை வழமைபோல காலை எட்டுமணிக்கு தமது பாடசாலைவேலைகளை அவர் ஆரம்பிப்பார்.

மாத்தளையில் அதிபராகவிருந்த திரு சி. ராஜதுரை அவர்களும் ஒரு சிறந்த ஆசிரியராவார் க. பொ. த. சாதாரண, உயர்தர மாணவர்களுக்கு பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய வேளைகளிலும் விடுமுறை நாட்களிலும் அவர் வகுப்புக்களை நடத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இந்த ஆசிரியரின் தூண்டுதலினலேயே நம்மவரில் பலர் மருத்துவ, பொறியியல், விஞ்ஞானத் துறைகளில் உயர்ந்த தகைமைகளைப் பெறமுடிந்தது.

இத்தனைக்கும் இவ்விரு ஆசிரியர்களும் தமது சொந்த நலனையோ அல்லது லாபத்தையோ கருதிக் கல்விப் பணியாற்றவில்லை அவர்களின் முழு நோக்கமும் ஒரு சிறந்த மாணவ சமூகத்தைக் கட்டியெழுப்புவதாகவே இருந்தது.

ஒரு சிறு குடிசையில் வறியம் குடும்பத்தில் பிறந்த என்னை விஞ்ஞானப் பட்டதாரியாக்கி எனது குடும்பத்தின் வறுமையை விரட்டிய பெருமையும் எனது மதிப்புக்குரிய ஆசிரியர் திரு. சி. ராஜதுரையையே சாரும்.

ருவன்வெல மத்திய மகா வித்தியாலயத்தில் இருந்து வெளியேறிய மாணவர்களில் பலர் நிர்வாக சேவையிலும், மருத்துவர்களாகவும், பொறியியலாளராகவும், பட்டதாரி ஆசிரியராகவும், இன்று சிறந்து விளங்குகின்றனர் இவர்கள் முன்பு சாதாரண வறியமாணவர்களாக இருந்தவர்கள். தமது இன்றைய உயர்ந்த நிலைக்கு அன்று தமக்குக் கல்வி புகட்

(7ம் பக்கம் பார்க்க)

# "இளைஞர்கள் மத்தியில் கருத்து பரிமாறல் அவசியம்"

(மானிப்பாய்)

''இளைஞர்கள் மத்தியில் கருத்துப் பரிமாற்றம் மிகவும் அவசியம் நிதானமான, தீர்க்கமான எதிர்காலத்துக்கு நன்கு உதவக்கூடிய உருப்படியான திட்டங்களை உருவாக்கவும், செயல்படுத்தவும் இத்தகைய கருத்துப் பரிமாற்றங்கள் நன்கு உதவி புரிவதாக அமையும் ''

இவ்வாறு யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய உயர்தர மாணவர் மன்ற வருடாந்த மதிய போசன விருந்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய சட்டத்தரணி திரு தி. சோமசுந்தரம் கூறினர்.

மாணவர் மன்றத் தலைவர் செல்வன் க. நடேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''இளைஞர்கள் எந்த ஒரு நல்ல திட்டத்தையும் செயல்படுத்தமுன் தம்மிடம் ஒழுக்கக்கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது அவசியம். அப்பொழுதுதான் அவர்களும் அவர்கள் சார்ந்த சமூகமும் பயன்பெற முடியும்.

சோதனைமிக்க இக்காலகட்டத்தில் இளைஞர்கள் இதனைக் கடைப்பிடித்து வருவது அவசியம்.

உறுதியுடன் செயல்படுவதற்குச் சுவாமி விவேகானந்தர் வாழ்ந்த வாழ்க்கையும் அவரது உபதேசங்களும் இளைஞர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் ''

கல்லூரி அதிபர் திரு. சி. சரவணபவன் தமது உரையில் கூறியதாவது:- வாழ்க்கையில் எல்லா சிறந்த அம்சங்களையும் நமக்குத் தேடித்தருவது கல்வியென்றும் அது ஒரு சிறந்த திறவுகோல் என்றும் இதனது மதிப்பை இளைஞர்கள் மட்டுமல்ல எல்லோருமே உணர்ந்து செயல்பட்டால் பெரிய அளவில் நன்மைபெற முடியும் எனக் குறிப்பிட்டார்.

# தெங்குப்பனம் பொருள்— கூட்டுறவுச்சங்க முறையை ஒழித்துக்கட்ட முயற்சி

[கொழும்புத்துறை]

''முல்லைத்தீவு மாவட்டத்தில் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க முறையை ஒழித்துக்கட்டி முதலாளித்துவ அடிப்படையில் தனியார் தவறணை முறையை அமுலுக்குக் கொண்டுவரத் தீயசக்திகள் முயன்று வருவது கூட்டுறவு முறைக்குச் சாவுமணி அடிக்கும் செயலாகும் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு பேராடுவதின் மூலமே எமது கூட்டுறவு அமைப்பைப் பாதுகாத்து வெற்றிகாண முடியும் ''

இவ்வாறு வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க சமாஜத் தலைவர் திரு. த. சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் போதியளவு வரியை அரசாங்கத்திற்குச் செலுத்தவில்லையென்ற காரணத்தைக்காட்டிச் சில அரசாங்க அதிகாரிகளும் கூட்டுறவுத் தவறணை முறையை இல்லாமற் செய்யும் முயற்சியில் தீயசக்திகளுக்கு உடந்தையாகவிருப்பது கவலையளிக்கின்றது என்றும் அவர் தனது அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பிரஸ்தாப அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;-

தனியார் முதலாளிகளின் முயற்சிகளால் எமது கூட்டுறவு அமைப்பை இல்லாமற் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் முதலாளித்துவவாதிகளிடமிருந்து எமது அமைப்பைப் பாதுகாப்பதற்காகத் தொழிலாளர்கள் அனைவரும் ஐக்கியத்து போராடவேண்டும்.

தனியார் குத்தகைமுறையை இறுதிவரை எதிர்த்துப் போராடத் தொழிலாளர்கள் சபதம் எடுத்துக் கூட்டுறவுச் சங்க முறையில் தம்மை வெகுவாகப் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் இந்த அநீதிக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்டச் சீவல் தொழிலாளர்களுடனும் சேர்ந்து போராடக் கிளிநொச்சி, யாழ் மாவட்டச் சீவல் தொழிலாளர்கள் தயாராகவுள்ளனர். கூட்டுறவு முறையா, தனியார் நலமா இன்றைய தேவை என்பதைச் சிந்திக்கவேண்டும் ''

## வவனியா பிரதேசத்தில்

# வன்செயல் அகதிகளுக்கு உதவி வழங்குவதில்

### பிரஜைகள் குழு அக்கறை

(வவனியா)

வவனியாவில் அண்மையில் இடம்பெற்றவன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குநிவாரணம் வழங்கப்படும் பணிகளில் வவனியா பிரஜைகள் குழு தீவிரமாக ஈடுபட்டுவருகிறது.

வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டு வீடுவாசல்களை இழந்து நிர்க்கதியாக இருப்பவர்களை இக்குழுவினர் தேடிச் சென்று அவர்களுக்கு இருப்பிட வசதிகளை வழங்க நடவடிக்கைஎடுத்துவருகின்றனர்.

அத்துடன் இதுவரை உதவி பெறாத பாதிக்கப்பட்டவர்கள் கிராமசேவர்கள் அல்லது உதவி அரசாங்க அதிபர் ஊடாக பிரஜைகள் குழுவுக்கு விண்ணப்பிக்குமாறு வவனியா பிரஜைகள் குழுத்தலைவர் சட்டத்தரணி என். எம். எக்ஸ். சொர்ணபாலா தெரிவித்துள்ளார்.

வன்முறைச் சம்பவங்களில் மோசமாகக் காயமடைந்து தொழில் புரியமுடியாதிருப்பவர்களுக்கும் உதவி வழங்கப்படும் என்றும் உதவி அரசாங்க அதிபரின் சிபார்சின் பேரிலேயே இந்த நிவாரண உதவி வழங்கப்படுகிறது என்றும் பாதிக்கப்பட்டவர்கள் மேலும் விபரங்கள் தேவைப்படின் சனிக்கிழமைகளில் தம்மைத் தமது இல்லத்தில் சந்திக்கலாமென்றும் திரு. சொர்ணபாலா தெரிவித்தார்.

## ஆபாசப்பட 'கஸட்டு'கள் இளைஞர்களால் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள மினி தியட்டர்களில் ஆபாசப் படங்கள் தொடர்ந்து காட்டிபவர்களிடமிருந்து அந்த ஆபாசப் படங்களின் வீடியோ கசட்டுகளை இளைஞர்கள் கைப்பற்றியுள்ளனர்.

யாழ் நகரிலுள்ள சில மினி தியேட்டர்களில் இந்த ஆபாச வீடியோ கசட்டுகள் நேற்று முன்தினம் இளைஞர்களினுல் கைப்பற்றப்பட்டன.

அண்மைக்காலங்களில்இந்த மினிதியேட்டர்கள் ஆபாசப் படங்கள் காட்டிவந்தபோது இளைஞர்கள் இவர்களை அணுகி இத்தகைய ஆபாசப்படங்களை காட்டக்கூடாது என்று எச்சரித்து ஒருமாதகால அவகாசமும் கொடுத்திருந்தனராம். அவர்கள் எச்சரித்த ஒரு மாத காலத்துக்குப் பின்னரும் பல மினி தியேட்டர்களில் இத்தகைய ஆபாசப் படங்கள் காட்டப்பட்டு வந்துள்ளன.

இதனை அறிந்த இளைஞர்கள் மேற்படி மினி தியேட்டர்களுக்குச் சென்று அங்கு காட்டப்பட்டுக்கொண்டிருந்த வீடியோ கசட்டுகளைக் கைப்பற்றியுள்ளதோடுஇனிமேலும் இத்தகைய படங்கள் காட்டப்படுமானுல் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை செய்துள்ளனராம்.

## போட்டி

(மானிப்பாய்)

மானிப்பாய் வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான வட்டார விளையாட்டுப் போட்டி இம்மாதம் 15-ம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

பிரதம அதிதியாக மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்சயன் கலந்து கொள்கிறார்.

## அட்டாளைச்சேனை மீனவர் பற்றி தகவல் இல்லை

(மட்டக்களப்பு)

சென்ற மாதம் 18ம் திகதி பொத்துவில் கடலில் மீன் பிடிக்கச்சென்றபோது காணுமல் போன அட்டாளைச் சேனையைச் சேர்ந்த மூன்று மீனவர்கள்பற்றி இதுவரை எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை.

அட்டாளைச் சேனையைச் சேர்ந்த மஞர்டீன், நஸீர், நியனுப் ஆகிய் மூவரும் சென்ற மாதம் பொத்துவில் கடலில் மீன்பிடிக்கச் சென்றபோது அவர்கள் சென்ற படகும் அவர்களும் காணுமல் போய்விட்டனர்.

இதனுல் சம்பந்தப்பட்டவர்களது குடும்பங்கள் கண்ணீரும், கம்பலையுமாக இருக்கின்றனர்.

காணுமல்போனவர்களைக் கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது.

இவேளை இந்த மீனவர் தொடர்பாகஅட்டாளைச்சேனையைச்சேர்ந்த திரு.இ திருநாவுக்கரசு தனிப்பட்டமுறையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன்தொடர்புகொள்ளஎடுத்த முயற்சிகள் பெரிதும் பாராட்டத்தக்கது'' என்று பொத்துவில் முதலாவது எம். பி ஜனுப் எம் ஐ. உதுமான் லெப்பை அட்டாளைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

## கடந்த வருடம் 13,000 பேர் குடும்பக் கட்டுப்பாடு செய்தனர்

(கொழும்பு)

கடந்த வருடம் ஆண்களும் பெண்களுமாக சுமார் 13,000 பேர் இலங்கையில் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை செய்துகொண்டனர்.

இவர்களில் மூன்றில்இரண்டு பங்கினர் பெண்கள் மூன்றில் ஒரு பங்கினர் ஆண்களாவர்.

இவ்வாறு குடும்பக்கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை செய்தவர்களுக்கு தலா 500 ரூபா வழங்கப்பட்டது.

## வடபகுதி கடலில் டைனமைட் கடத்தல்

# தமிழ்நாட்டு வாலிபர் உட்பட 6 பேருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இயந்திரப் படகு மூலம் 'டைனமைட்' வெடிமருந்துகளை இலங்கைக்குக் கடத்திவநததாக 5 யாழ்ப்பாண வாலிபர்களுக்கும் ஒரு தமிழ்நாட்டு வாலிபருக்கும் எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ரி. சுந்தரலிங்கம் முன்னிலையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த வை இராமலிங்கம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏ. எஸ். எம். மௌஸீன், பி. சுப்பிரமணியம் கே இளமுருகன், கே விசாகராஜா, எஸ். அரியரத்தினம் ஆகியோர் 84-ம் ஆண்டு மார்ச் மாதம் 231 கிலோ கிறும் 'டைனமைட்' வெடி மருந்தையும் 23 கிலோகிறும் டைனமைட் வயரையும் கடத்திவந்ததாகக் குற்றம் சாட்டி ஆஜர் செய்யப்பட்டனர். வடபகுதிக் கடலில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். விசாரணையின் போது கடற்படை லெப்டினன்ட் இந்திரகீர்த்தி பெரேரா சாட்சியமளித்தார். எதிரிகள் சார்பில் திரு. குமார் பொன்னம்பலம், திரு கே. வி. மகேந்திரன் ஆகியோர் ஆஜரானுர்கள். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## இல்ல விளையாட்டுப் போட்டி

(கரவெட்டி)

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இம் மாதம் 12 திகதி கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் திரு கே சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

இக்கல்லூரியின் வளர்ச்சியில் நீண்டகாலம் பணியாற்றியவரும் இதன் பதில் அதிபராகச் சிலகாலம் பணிபுரிந்த வருமான ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு ஆர் சுப்பிரமணியம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.


## உயர் விளைச்சலை நீங்கள் பெறவேண்டுமா?

# பேத்திரோய்ட் ஈசி 050

விலை 50 மி.லீ. 70/-
100 மி.லீ. 130/-

இலை உண்ணும் புழுக்கள், வெட்டுப்புழுக்கள்,
காய்துளைப் புழுக்கள், என்பவற்றை அறவே கட்டுப்படுத்த

BAYER ஹேகெம் லிமிட்டெட்

உங்கள் விநியோகஸ்தர்கள் :

யூனியன் ஏஜென்சீஸ், 50¹, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ், அந்தோனிப்பிள்ளை கட்டடம், கிளிநொச்சி.

குளோப் ரேடர்ஸ், பசார் வீதி. வவுனியா.

பாயர் இரசாயனம் இலங்கையின் பெருவிளைச்சலின் உறுதுணை.

# எம். பி.மார்களுக்கு சலுகை அடிப்படையில் புதிய கார்கள்

[கொழும்பு]

தீர்வையற்ற வரிச் சலுகையின் கீழ் பாராளுமன்ற எம். பி க்களுக்கு குறைந்த விலையில் மோட்டார் கார்கள் வழங்கப் படவுள்ளன.

அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

உடல் நலம் குறைந்த எம். பி.மார்களுக்கு சொகுசு 'பென்ஸ்' கார்கள் வழங்கப்படவுள்ளன. புதிய எம். பி. மார்களுக்கும் குறைந்த சலுகை அடிப்படையில் கார்கள் வழங்கப்படவுள்ளன.

# உணவு, எரிபொருட்கள் வடபகுதிக்கு வருகின்றன

[கொழும்பு]

வடபகுதிக்கு உணவுப் பொருட்களும், எரிபொருள்களும் இவ்வாரம் பெருமளவில் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

ரயில்கள்மூலம் உணவுப் பொருட்களை அனுப்ப உணவுத் திணைக்களம் தற்போது சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

இதேபோன்று தற்போது யாழ்ப்பாணத்திலும் எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்குமுகமாக எரிபொருட்களை அனுப்பிவைக்க பெற்ரோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

இவ்வாரம் ரயில்கள் மூலம் எரிபொருட்கள் அனுப்பி வைக்கப்படும் என்று பெற்ரோலிய கூட்டுத்தாபனத் தலைவர் திரு. டகாம் விமலசேன தெரிவித்துள்ளார்.

# இன்றைய பலன்

மாதம்—ஆனி
திகதி—26 (1985-7-10)
புதன்
திதி—அட்டமி முன் இரவு வரை
நக்ஷத்திரம்—ரேவதி முன் இரவு வரை

மேடம்:- வெளியிடத்து தொடர்புகளில் மந்த நிலை தென்படும் தொழிற்துறையில் வேலைகள் அதிகரிக்கும். உடல் நலம் பாதிக்கப்படலாம்.

இடபம்:- குடும்பத்தில் அமைதி நிலவும். வெளியூர் நண்பரின் வருகை மகிழ்ச்சியைத்தரும் வரவேற்கவேண்டிய தினம்.

மிதுனம்:- மாணவர் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம் கல்வித்துறையிலும் முன்னேற்றம் உண்டு. சகோதரவழி ஆதரவும் உண்டு.

கடகம்:- இதயத்தை தொடும் சம்பவங்கள் இடம் பெறும். சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பம் கிடைக்கலாம். தாய் வழிச் சுகமும் உண்டு

சிங்கம்:- நேர்முகப் பரீட்சைக்கு உகந்ததினம். தெய்வத்தின் அருள் தாராளமாக உண்டு. புத்திர வழியாலும் சிறப்புண்டு.

கன்னி:- எக்காரியத்திலும் அதிக கவனம் செலுத்துவது விரும்பதக்கது. உதவி செய்யப்போய் குறை கேட்க நேரிடலாம். உடல் நலத்தைப் பேணவும்.

துலாம்: குடும்பவாழ்க்கை இன்று சுகமாக இருக்கும் தூரத்து உறவினர் ஒருவர் உங்களுடன் ஒத்துழைக்க முன் வருவார்.

விருச்சிகம்:- முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை தோன்றும். சிலர் கடன் படவும் நேரும் நண்பராலும் நஷ்டத்திற்கு இடமுண்டு

தனுசு:- நீண்ட நாள் பிரச்னையில் இன்று சமரச முடிவு காணப்படும் மற்றவர்கள் மத்தியில் நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொள்வீர்கள்.

மகரம்:- துணிச்சலுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள் விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் பிறக்கும்.

கும்பம்;- பணவிடயத்தில் நல்ல மாறுதல்கள் ஏற்படும் பொருளாதார வரவுக்கும் இடமுண்டு.

மீனம்:- அதிக சிந்தனைகிறிய தலையடியைக் கொடுக்கும். உடல் நலம் பாதிக்கப்படலாம். அதிக கட்டுப்பாடு அவசியம் தேவை.

திருமலை
வே. ரவீந்திரன்

# "இன ரீதியான கல்வியால் பிரச்னைகள் உருவாகின"

(புலோலி)

"இந்நாட்டிலுள்ள பெரும்பான்மையானோருக்கு நாட்டின் வரலாறு தெரியாத காரணத்தினாலேயே நாடு இனவாதத்தில் சிக்கித் தத்தளிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. நாட்டின் வரலாறு படுமோசமான முறையில் பாடப்புத்தகங்களில் திரித்துக் கூறப்பட்டுள்ளபடியால் இளம் உள்ளங்களில் இனவாத நஞ்சு சிறுபராயத்திலிருந்தே பாய்ச்சப்படுவது கவலைக்குரியதாகும்"

இவ்வாறு, வதிரி அபிவிருத்தி நிறுவனத்தின் நூல் நிலையத்தைத் திறந்துவைத்து உரையாற்றிய சட்டத்தரணி வ. மகாலிங்கம் குறிப்பிட்டார். இந் நூலகத் திறப்பு விழாவிற்கு இளைப்பாறிய அதிபர் திரு. எம். எஸ். சினித்தம்பி தலைமை தாங்கினார். திரு. மகாலிங்கம் மேலும் கூறியதாவது:

பழம் பெரும் காப்பியமான மகாவம்சம் எத்தனை குறைபாடுகளைக் கொண்டுள்ள போதும் அதில் இனவாத உணர்வின் சாயலையே காண முடியாது பழைய வரலாறுகளில் தமிழ், சிங்கள மன்னர்களிடையே போர்கள் நடைபெற்றபோதிலும் தமிழ், சிங்கள மக்களிடையே இனவாத உணர்ச்சிகள் இருந்தமைக்கு எவ்வித சான்றுகளுமில்லை. மாறாக மகாவம்சம் எல்லாள மன்னனின் நீதி உணர்வைப்பாராட்டியுள்ளது. மகாவம்சத்திற்குப்பின் வந்த ஐரோப்பியரின் செயல்களிலும் இனவாதம் இருந்தமைக்கான எவ்வித சான்றுகளுமில்லை. எனவே இனவாதம் பேரினவாதம் ஆகியன மிகவும் பிற்பட்ட காலத்திலேயே உருவாகியுள்ள தென்பதை உணர முடிகின்றது.

எழுத்தாளர் தெணியான் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

"நாட்டில் இன்று ஆபாசப் படங்கள் போல ஆபாச நூல்களும் உலாவுகின்றன. இவற்றை இனங்கண்டு நல்ல தரமுள்ள நூல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை மாணவர் மத்தியில் ஜனரஞ்சகப்படுத்த வயதுவந்தோர், ஆசிரியர், பெற்றோர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்."

அதிபர் திரு. எஸ். சதானந்தன், ஆசிரியர் திரு. கே. நடராஜா ஆகியோரும் உரையாற்றினார்கள். மன்றச் செயலாளர் திரு. கே எதிர்வீரசிங்கம் நன்றியுரை வழங்கினார்.


லதா மினி
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-30
M.G.R. - சரோஜாதேவி
நீதிக்குப் பின் பாசம்

நியூ சாந்தி மினி
(யாழ். சாந்தி சினிமாவில்)
10-30, 2-30, 4-45
Dirty Harry
[Action Packed]

பவித்ரா மினி
கஸ்தூரியார் வீதி
(யாழ். இந்துக்கல்லூரியடி)
10-30, 2-30, 4-30, 6-30
Blue Lagoon

வின்ஸர்
வெண்திரையில்
தினசரி 10-30, 2-30,
இரவு 6-00
GANDHI
காந்தி அடிகள்
குறிப்பிட்ட சிலதினங்கள் மட்டும்.

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
Daily 10-30, 2-30,
4-30 p. m.
"SPLASH"
(color)
கடல்கன்னி பெண்ணாக மாறும் அதிசயம்.
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

சோபிகா மினி
(ஹோட்டல் சோபிகா மேல்மாடி
பஸ்நிலையம் முன்பாக)
தினசரி 10-30, 2-30, 6-00
கமல், ரஜனி, ஸ்ரீபிரியா நடித்த
ஆடு புலி ஆட்டம்
பயங்கர சண்டைக்காட்சிகள் நிறைந்த படம்

குமரன்
மினி சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
10-30, 2-30
மோகன் - ஜயஸ்ரீ நடித்த ஸ்ரீதரின்
தென்றலே என்னைத்தொடு

உஷா மினி
(கே கே எஸ். வீதியில் முட்டாசுக்கடை சந்திக்கும் வை. சி. சி. கு. கடை சந்திக்கும் மத்தியில்)
தினசரி 10-30, 2-30
4-30, 6-00
Debra Blee in
The Beach Girls
(கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

லிபேர்ட்டி மினி
(வெலிங்டன் சந்தி அருகாமை)
தினசரி 10-30, 2-30,
ராஜேஸ் - நளினி
இளவரசி
ராஜாத்தி ரோஜாக்கிளி
(புதிய படம்)
பி. 5-30க்கு
Clint Eastwood,
Lee Van Cliff
FOR A FEW DOLLAR MORE
(Cow Boy Film)

தேவி மினி சினிமா
(வின்ஸர் அருகாமை)
10-7-85 தொடக்கம்
10-25, 2-15 4-15
CASSENDRA CROSSING
(Thrill - Color)
ஒரு பயங்கர வியாதியால் பல்லாயிரக்கணக்கான உயிர்களை ரெயிலின்மூலம் கொல்ல எடுக்கப்படும் முயற்சியை முறியடிக்கும் ஒருதீரச் செயல் நிறைந்த சித்திரம். பிரத்தியேகமாகத் தருவிக்கப்பட்ட பிரதி.

மொடேர்ண் மினி சினிமா
(ஸ்ரீலங்கா அச்சக வேலன் ராஜா தியேட்டருக்கு அருகாமை)
10-7-85 காலை 10 மணி
நவக்கிரகநாயகி
பாண்டியன், நளினி, சுரேஸ் விஜி
EK. DUUJE KE LIYE
கமலஹாசனின் சிறந்த நடிப்பில் உருவான ஹிந்திப் படம்
2-30, 4-30 காட்சிகள்

ஸ்ரான்லி மினி "A"
10-30, 2-30
கமல் - ஊர்வசி
அந்தஒரு நிமிடப்

ஸ்ரான்லி மினி "B"
10-30, 2-30
அந்த ஒரு நிமிடம்
தாய்க் குலத்திற்கு தனி இடம் உண்டு

வெலிங்டன்
10-30 — 2-15 — 4-15
Night Shift

லிடோ சினிமா
10-30, 2-30, 5-30
தியாகராஜன், சில்க் சுமிதா, ஜெயசங்கர் நடித்த
நீங்கள் கேட்டவை

மேபெயர் மினி
(கன்னாதிட்டி)
10-30 a m
பாக்கியராஜ். ஊர்வசி,
முந்தானை முடிச்சு
2 30 p m
DEATH RIDES A HOR E
Lee van c'eef
(Cowboy Film)
6 00 p m
சிவாஜி-ஜெமினி-சாவித்திரி
பாசமலர்

ரெருசோ ஷிப்ஸ்
TERRAZZO CHIPS
IMPORTED
★ கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLLAND)
★ அலுமினியம் தகடுகள் (18g x 16g)
★ வெள்ளைச் சிமெந்து
★ காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
★ TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்குமிடம்
Rs. 6/75-க்கு மேல்
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12
தொலைபேசி: 34411 — 31511

ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ்,
இத்தாலி, ஹொலண்ட்
முதலிய நாடுகளுக்கு
குறைவான கட்டணத்துடன்
பாதுகாப்பான பிரயாண ஒழுங்குகள்.
கொழும்பிலிருந்து எமது பிரதிநிதி பிரயாணம் பூர்த்தியாகும்வரை உங்களுடன் வந்து எல்லா உதவிகளையும் செய்வார்.
பாஸ்போட், பொண்டிங், இந்தியன் விஸா முதலியனவும் செய்து கொடுக்கப்படும்.
N. தவம்,




PARIS TRAVELS
100,1/3, Keyzer Street,
Colombo-11

'சுமங்கலி',
நவீன சந்தை,
சாவகச்சேரி,

முகாமையாளர்,
குமரன் ரூரிஸ்ட் இன்,
67, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23753.

எட்வேட் தங்கவடிவேல் ராஜ்குமார்,
யோகநாயகி சினிமா,
வல்வெட்டித்துறை.

# 'மாணவர்கள் எதிர்காலத்தை தாமே தீர்மானிக்க வேண்டும்'

(யாழ்ப்பாணம்)

''பாடசாலை மாணவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் ஒழுக்கத்தையும் பேணி நடக்க வேண்டும்'' என்று யாழ். பல்தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் லயன் எஸ். இராஜேந்திரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். லயன்ஸ் கழகத்தின் புதுநிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பதவி ஏற்பு வைபவம் 'பாம் கோட்' ஹோட்டலில் நடைபெற்றது.

இவ்வைபவத்துக்கு பிரதம விருந்தினராக பல் தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் லயன் இராஜேந்திராகலந்துகொண்டு பேசுகையிலேயே மேற்குறிப்பிட்ட கருத்தைத் தெரிவித்தார்.

சிறப்புவிருந்தினராகசென்ற வருட லயன் கவர்னர் நவா டீ குறூஸ் கலந்துகொண்டார்.

புதிய யாழ். லயன்ஸ் கழகத் தலைவராக லயன் ஜி யுபேந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

லயன் இராஜேந்திரா இவ்வைபவத்தில் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில், ''பாடசாலை மாணவர்களே தங்களின் எதிர்காலக் கல்வி நிலையைத் தாங்களாகவே நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் வழிகாட்டியாகஇருந்துவரும்முறை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்ட லயன் இராஜேந்திரா, மாணவர்கள் தமது எதிர்கால நலனைக் கவனத்தில் கொண்டு, தமது அறிவுக்கேற்ற உயர் கல்வியைத் தெரிவுசெய்ய வேண்டும் என்றும் அப்படியான ஒரு சமுதாயம் உருவாக வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கல்வி கற்கும் விஷயத்தில் பிள்ளைகளுக்குப் பெற்றோர் ஒத்தாசையாயிருக்கலாமே தவிர தமதுவிருப்பத்திற்கேற்ப குறிப்பிட்ட கல்விதான் கற்க வேண்டும் என்று வற்புறுத்தக் கூடாது என்றும் அவர் சொன்னார்.

இவைப்பாறிய யாழ். லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ். அற்புதானந்தா பேசுகையில், அகதிகள்புனர்வாழ்வுக்கு யாழ் லயன்ஸ் கழகம் ஆற்றிய அரும் பெரும் சேவைகள் பற்றிச் சொன்னார். [மா]

## யாருடையது

நல்லூர் சட்டநாதர் வீதியைச் சேர்ந்த திரு. சி. ஜெயபதி என்பவர்ஒரு கால் சங்கிலியை நல்லூரில் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## ஒரு சிங்கள ..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டிய திரு. ராஜதுரை போன்ற தமிழாசிரியர்களே காரணம் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

இன்று நிலைமை மாறியுள்ளது. தமிழர் - சிங்களவரிடையே கசப்புணர்வு தோன்றியுள்ளது. இக்கவலைக்குரிய சூழ்நிலையில் தென் பகுதியின் மத்திய கல்லூரிகளில் யாழ்ப்பாண ஆசிரியர்கள் ஆற்றிய மாபெரும் கல்விப்பணியை எனது சக சிங்களச் சகோதரர்கள் உணர்ந்து அவர்களுக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டுமென்பதே எனது விருப்பமாகும். (கி)

நன்றி: Daily News

# கிளிநொச்சியில் நடந்த ஹர்த்தாலும், ஊர்வலமும்

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடைகள் பூட்டப்பட்டிருந்ததுடன் அலுவலகங்கள், பாடசாலைகள் முதலானவையும் இயங்காது ஸ்தம்பித்திருந்தது போக்குவரத்துச் சேவையும் சீர்குலைந்து மாவட்டத்தில் மயான அமைதி நிலவியது.

கிளிநொச்சி நகரில் விவசாயிகள், மாணவர்கள், தொழிலாளர்கள், பொதுமக்களடங்கிய ஆர்ப்பாட்டஊர்வலம் ஒன்றும் அன்றைய தினம் நடைபெற்றது.

இயக்கங்களின் போர் நிறுத்தத்தை கண்டித்தும், பேச்சுவார்த்தைக்கு ஆட்சேபம் தெரிவித்தும் இந்த ஆர்ப்பாட் ஊர்வலம் நடைபெற்றது.

நகரின் ஊடாக மாணவர்கள் வாகனங்களில் கோஷம் எழுப்பிச் சென்றதுடன் நடை ஊர்வலமும் நடத்தினார்கள்.

## ஆங்கில தொடர் எழுத்துப் போட்டி

(கிளிநொச்சி)

கிளிநெபச்சி மாவட்டத்தில் கல்விபயிலும் மாணவர்களிடையேயான ஆங்கிலத் தொடர் எழுத்துப் போட்டி ஒன்று கரடிப்போக்கு விஞ்ஞானக்கல்வி நிலையத்தில்நடைபெற்றது.

மேற்படி கல்வி நிலைய ஆங்கில சேவைக்குழுவால் நடத்தப்பட்ட இப் போட்டியில் சுமார் 300பேர் கலந்து கொண்டனர்,

போட்டிக்கான பரிசில்களை தொழிலதிபர் திரு கே. கனகராசா வழங்கியுள்ளார்.

# நிருபரின் கடத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்பு!

## ஒருவர் நஞ்சருந்தி மரணம்

(யாழ்ப்பாணம்)

பத்திரிகை நிருபர் ஒருவரிடமிருந்து கடந்த வெள்ளிக்கிழமை கடத்திச்செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் நேற்று முன்தினமிரவு மீட்கப்பட்டது.

இக்கடத்தலை மேற்கொண்ட மூவர் இளைஞர்களிடம் பிடிபட்டனராம், இவர்களில் ஒருவர் இளைஞர்களிடம் பிடிபட்டதும் தான் வைத்திருந்த கிருமிநாசினியை உட்கொண்டு உயிரைப் போக்கிக்கொண்டாராம்.

அச்செழுவைச் சேர்ந்த 'ஏவியன்' என்று அழைக்கப்படும் நபரே தற்கொலை செய்து கொண்டவராவர்.

இந்த நபர் விடுதலை இயக்கமொன்றைச் சேர்ந்திருந்தவர் என்றும் அண்மையில் அதன் கட்டுப்பாடுகளை மீறி வேறு சிலருடன் சேர்ந்து இத்தகைய செயல்களில் ஈடுபட்டு வந்தவர் என்றும் கூறப்படுகிறது.

கடத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் புத்தூர் மேற்கில் உள்ள கலட்டி என்ற இடத்தில் பற்றைக்குள் கிடந்து கைப்பற்றப்பட்டது இலக்கத்தகடு அகற்றப்பட்ட நிலையிலேயே இதுகண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பிடிபட்ட ஏனைய இருவரும் விசாரிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

இவர்கள் இதற்கு முன்னரும் இப்பகுதிகளில் இது போன்ற சம்பவங்களில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

# "கஷ்டங்களை தெய்வச் செயலாக கருத வேண்டும்"

(உடுவில்)

''பல்வேறுகஷ்டங்கள் மத்தியில் சிந்தனை திறன்மிக்க தமிழ் மக்கள் தங்கள் கஷ்டங்களை யெல்லாம் தெய்வச் செயல் எனகொள்ள வேண்டும். நம்துயர் தீர்க்க யாழ்ப்பாணத்தில் அரன் நாமம் சூழ வேண்டும். சிவன் ஆட்சியில் நம்பிக்கை வைத்து நம் காரியங்களைத் தொடங்குவோம்''.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில பரிசில்களை வழங்கிய முன்னாள் கல்விப் பணிப்பாளர் கலாநிதி திருமதி இரத்தினா நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

கலாநிதி திருமதி இரத்தினா நவரத்தினம் தமது உரையில் மேலும் கூறியதாவது ''அவமும் சக்தியுமாக விளங்கும் ஆசிரியர்களும் மாணவர்களும் இப்பாடசாலையின் சைவசமயக் கலாசாரம், பண்பாடுகளில் நின்று சற்றேனும் பிறளக் கூடாது. போர் நிலையில் கூட தர்மத்தின் வழிநின்று கண்ணபிரான் அர்ச்சுனை புறப்படு எழுமின் என்று கூறியதைப் போன்றே நாமும் ஞானப்பறை சாற்றுவோம். எம்கஷ்டங்களை இறைவனிடம் ஒப்படைத்து இறைவனை வேண்டுவோம். இறைவனை வேண்டுவதையே இன்றைய நிலையில் நாம் குறிக்கோள் கொள்வோம்.''

# கொள்ளைகள் தொடர்பாக கொழும்பில் 10பேர் கைது!

[கொழும்பு]

கொழும்பில் பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 10 பேர் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

இவர்கள் பலகாலம் பொலிசாரினால் தேடப்பட்டு வந்தனர்

ஜாஎல, காலி ஆகிய இடங்களில் இருந்து 4 பேரும், கொழும்பில் 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பின் பலஇடங்களில் 4 மோட்டார் சைக்கிள்கள். ஒரு வான் ஆகியவற்றை கடத்திய சம்பவங்கள் தொடர்பாக 4 பேரும், கொள்ளுப்பிட்டியில் மோட்டார் சைக்கிள் கடத்தல் தொடர்பாக 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## க. பொ. த- உயர்தர வகுப்பு

(யாழ்ப்பாணம்)

(மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புக்களை நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# பிதா சிங்கராயரை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## வண. சின்னராஜாவும் நானும் பேசவில்லை

ராணுவ முகாமுக்கு அடுத்த பக்கத்தில் இருந்த புதுஇல்லத்துக்கு நாம் அழைத்துச் செல்லப்பட்டோம். நானும் பிதா சின்னராசாவும் எதுவும் பேசவில்லை. அமைதியாக இருந்தோம். யாருடனும் பேச வேண்டாம் என்று 14ம் திகதி எனக்கு கூறப்பட்டிருந்தது. அங்கே நடுநிசியளவில் மேஜர் முனசிங்க வந்தார். அங்கே எதுவும் இல்லாததைக்கண்டு இரண்டு கட்டில்களைக்கொண்டு வந்துபோடும்படி சொன்னார்.

## உயிருடன் இருந்ததே பெரியகாரியம்

அங்கே என்ன நோக்கத்துக்காக என்னை அழைத்துவந்தார்கள் என்று எனக்குத் தெரியாது நானும் அதைப்பற்றிக் கேட்கவுமில்லை நான் உயிருடன் இருந்ததே பெரியகாரியம் முன்னர் பாதுகாப்புப் படையினரால் கொண்டு போகப்பட்ட வாலிபர்களுக்கு என்ன நடந்ததென்பதை நான் அறிந்திருந்தேன். எனக்கு என்ன நடக்கப்போகிறதோ என்று குழம்பிக்கொண்டிருந்தேன் எனது சகோதரர் முகாமுக்கு அழைத்துவரப்பட்டது, வண. பிதா சின்ன ராசாவுக்கு என்ன நடக்கப் போகிறதோ என்ற கவலை, எனது வாக்குமூலத்தை எப்போது பதியப்போகிறார்களோ என்பதையெல்லாம் நினைத்தி நான் யோசித்துக்கொண்டிருந்தேன்.

## பிதாவே என்னை ஏன் கைவிட்டீர்?

பிதாவே என்னை ஏன் கைவிட்டீர்? என இறைவனை நான் வேண்டினேன். கிறிஸ்து துன்பப்பட்டது ஒரு இரவு மாத்திரமே. ஆனால் நான் துன்பப்படுவது பல இரவுகள் எனினும் நான் விசுவாசத்தை இழக்கவில்லை எனது விசுவாசத்துக்கு அது ஒரு சவாலாக இருந்தது. கிறிஸ்துவை ஒருவர் பின்பற்றவேண்டுமானால் கிறிஸ்துவின் சிலுவையை அவர் சுமக்கவேண்டும் கிறிஸ்துவையும் சிலுவையையும் பிரிக்கமுடியாது. சிலுவை என்பது வேதனை என்று பொருள்படும். ஞாயிறு தினங்களில் எனது பிரசங்கத்தைக் கேட்பதற்கு கிறிஸ்தவர்கள் மாத்திரமல்லாது இந்துக்களும் வருவதுண்டு

## மீண்டும் எழுதுங்கள்

அடுத்தநாள் இன்ஸ்பெக்டர் கால்லகே வந்து அரைப்பக்கத் தாள்களைத் தந்து உங்களுடன் நேரத்தை வீணடிக்கமுடியாது நீங்கள் மீண்டும் எல்லாவற்றையும் எழுதவேண்டும் முன் எழுதியவை முறையாகஇல்லை. எழுதாவிட்டால் உங்கள் தாயை இங்கு காண்பீர்கள் அவர் நிர்மலாவுக்கு ஒரு துணையாக இருப்பார். என்னுடன் விளையாட முயற்சிக்கவேண்டாம். நீர்வேலி பற்றி மறக்க வேண்டாம். பிரபாகரனை சேர்க்க மறக்கவேண்டாம். ரவியின் பெயரை எழுதும்போது பிரபாகரனையும் எழுத வேண்டும். நீங்கள் அதைச் சரியாகச் செய்வீர்கள் என்று நினைக்கிறேன். என்று கூறிவிட்டு கால்லகே போய்விட்டார்.

## ஒரு பொறியில் சிக்கினேன்

நான் ஒரு பொறியில் சிக்கப்பட்டிருந்ததை அறிந்[illegible]

கால்லகே மீண்டும்வ[illegible] வருமாறு எழுதச் [illegible]ர்.

அரசியலி[illegible] எவ்வாறு சம்பந்தப்பட்டீர்கள் கெட்ட பயங்கரவாதிகளுடன் எவ்வாறு சம்பந்தப்பட்டீர்கள். பயங்கரவாதிகள் பற்றி எழுதுவதற்கு பயப்படவேண்டாம் இவ்வாறு எழுதினால் விடுவிக்கப்படுவேன் என்று காலகே கூறினார்

அவரது வேண்டுகோளுக்கு கீழ்ப்படிந்தால் விடுதலை செய்யப்படுவேன் என்று நினைத்தேன்.

## பூட்டான்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்துகொண்டனர்.

கலைகரத்தினம் வீதி, நாவலர் வீதிச்சந்தியில் புறப்பட்ட இந்த ஊர்வலம், நாவலர் வீதியால் வந்து, இராசாவின் தோட்ட வீதி, ஸ்ரான்லி வீதி வழியாகச் சென்றது.

பூஸாவில் சித்திரவதை பூட்டானில் பேச்சுவார்த்தையா? 'தனிநாடு கேட்டோம் மினி வீடுகிடைத்தது' ''இயக்கங்களின் தவறான போக்கை எதிர்ப்போம்'' 'மாணவர் சக்தியே பெருமசக்தி'போன்ற வசனங்கள் நூற்றுக் கணக்கான சிலோகன் அட்டைகளில் எழுதப்பட்டிருந்தன.

வீதியோரங்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் நின்று ஆதரவு தெரிவித்து தாகசாந்தியளித்தார்கள். ஊர்வலம் சென்றபோது மேல ஹெலிக்கோப்டர் பறந்து கொண்டிருந்தன.

## குறைந்தபட்ச..,

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

## கூட்டணித் தலைவர்கள்

திம்புவுக்குப் புறப்பட்டுச் செல்லுமுன் இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியையும் தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் சந்தித்தார்கள்.

இலங்கை அரசுடன் தாம் பேசிய விடயங்கள், ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தன- பிரதமர் ரஜீவ் காந்தி இருவருக்குமிடையில் நடந்த கருத்துப் பரிமாறல், திரு ஹெக்டர் ஜெயவர்த்தன தலைமையில் புதுடில்லி வந்த சட்ட வல்லுனர்கள்குழு நடத்திய பேச்சுக்கள் முதலியவற்றின் விபரங்களை கூட்டணித் தலைவர்களுக்கு திரு. பண்டாரி விபரமாக விளக்கியதாகத் தெரிகின்றது.

## இவர்களுக்கு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வாசிரியர்களுக்கு புதிய சம்பளத்திட்டப்படி சம்பளம் வழங்கவில்லை என்று சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் இ. த. ஆ சங்கப்பொதுச் செயலாளருக்குப் புகார் செய்திருந்தனர். இவ்விஷயம் சம்பந்தமாக பொதுச்செயலாளர் திரு மகாசிவம் கல்வி அமைச்சரின் கவனத்துக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து கல்வி அமைச்சு மேற்குறிப்பிட்ட பணிப்புரையை வழங்கியுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## ஒம்லோ அடிகள் யாழ். வந்தார்

(யாழ்ப்பாணம்)

பலதடவை யாழ்ப்பாணம் வரவிடாமல் தடைசெய்யப்பட்ட பரந்தன் பங்குத்தந்தை வண. பிதா சி எம் ஒம்லோ அடிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

கடந்த பல மாதங்களாக யாழ் மாவட்டத்துக்குள் வருவதற்கு வண பிதா ஒம்லோ அடிகள் முயற்சிகள் மேற்கொண்டிருந்தார் அப்படியான சந்தர்ப்பங்களில் ஆனையிறவில் வைத்து அவர் திருப்பி அனுப்பப்பட்டு வந்தார்

கடைசியாகப் பாதுகாப்பு அமைச்சிடமிருந்துகூட கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் போக பர்மிட் எடுத்திருந்தும் அவர் யாழ்ப்பாணம் செல்ல அனுமதிக்கப்படவில்லையாம்.

வண பிதா ஒம்லோ அடிகள் ஒல்லாந்து தேசத்தை சேர்ந்தவரி என்பது குறிப்பிடத்தக்கது. (மா)

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## யாழ். பொலிஸ் தலைமை நிலையப் பொறுப்பதிகாரி

(யாழ்ப்பாணம்)

யாழ் பொலிஸ் நிலையத்தின் தலைமைக்காரியாலயப்பொறுப்பதிகாரியாக ஜனுப் எம். ஏ. கமால்தீன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் கடமையாற்றிய இவர் இன்று யாழ். பொலிஸ் நிலையத்தில் பதவி ஏற்கிறார். (மா)

# "நான்கு மாதங்களில் பூர்த்தியாகும் யாழ். மாவட்ட வீதிகளுக்கு 150 லட்சம் ரூபா ஒதுக்கீடு"

[யாழ்ப்பாணம்]

"யாழ்ப்பாண மாவட்டத்தில் வீதி வேலைகளுக்காக இவ்வருடம் 150 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வீதி அமைத்தல் பெரும் திருத்த வேலைகள், சிறு திருத்த வேலைகளுக்கு இப்பணம் செலவிடப்படும். அடுத்த 4 மாத எல்லைக்குள் இவ்வீதி வேலைகள் பூர்த்தியாகும்."

யாழ். அரசாங்க செயலகத்தில் நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒதுக்கப்பட்ட பணம் இவ்வருட முடிவுக்குள் செலவிடப்படவேண்டும் என்றும், வருடம் முடிவடைய ஐந்தரை மாதங்கள் இருந்தபோதிலும், மழைகாலத்திற்கு முன்னர் வேலைசெய்யவேண்டியிருப்பதால் அடுத்த 4 மாதத்திற்குள் வேலைகள் பூர்த்தியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

மாவட்ட அபிவிருத்திச் சபை பெருந்தெருக்கள் திணைக்களம் உட்பட நான்கு வழி மூலம் இப்பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உடைத்த பாலங்களான கைதடி, முள்ளி, சாவகச்சேரி மற்றும் பாலங்கள் திருத்துவதற்கு முதலிடம் அளிக்கப்படுமென்றும், இப்பாலங்கள் ஊடாக வாகனங்கள் முன்னர் போல் செல்வதற்கு பாலத்திற்கூடான வீதி சீராக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

1984 நடுப்பகுதியில் நிறுத்தப்பட்ட வீதிவேலைகள் மீண்டும் இவ்வருடம் ஜுன் 18ம் தேதிமுதல் செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும், கடந்த 2 வாரகாலமாக வீதி வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருவதாகவும் கூறினார்.

84ம் ஆண்டு ஒதுக்கப்பட்ட பணத்திற்கு தேவையான கல் மற்றும் வீதி திருத்த வேலைக்குரிய பொருட்கள் வாங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மின்சார விஸ்தரிப்பு வேலைகளுக்கு இவ்வருடம் சுமார் 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், இதில் 27 லட்சம் ரூபாவிற்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும், இவ்வேலைகள் மின்சார சபை மூலம் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

## வேலணையில் 3 கல்வி வலயங்கள்

(மண்டைதீவு)

வேலணைக் கல்வி வட்டாரம் மூன்று கல்வி வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வி வட்டாரத்தில் இயங்கிவந்த பாடசாலைகளை தற்பொழுது மூன்று வலயங்களாகப் பிரிக்கப்பட்டு, மூன்று பாடசாலைகளை ஒவ்வொரு வலயத்துக்குமுரிய முதல் பாடசாலைகளாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகியவற்றை உள்ளடக்கிய 7 பாடசாலைகளை ஒரு வலயமாகவும், வேலணைப்பகுதியை உள்ளடக்கிய 11 பாடசாலைகள் ஒரு வலயமாகவும், ஊர்காவற்றுறை, எழுவைதீவு, அனலைதீவு ஆகியவற்றையும் உள்ளடக்கிய பாடசாலைகளை ஒருவலயமாகவும் வகுத்து மூன்று வலயங்களாக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகியவற்றை உள்ளடக்கிய வலயத்தில் மண்டைதீவு மகாவித்தியாலயம் முதல் பாடசாலையாக இருக்கும்.

---

## பொது மன்னிப்புக் கோரி வேண்டுகோள்

எமது மகனும் எமது சகோதரரும், ஊர்வாசியுமான செல்லையா சிவநேஸ்வரன் விசாரணைக்காக வீட்டிலிருந்து சில இளைஞர்களால் 02-07-1985 அன்று அழைத்துச்செல்லப்பட்டார் இதுவரை வீடு வராததால் இவரது பெற்றோரும், சகோதரிகளும் ஊண் உறக்கமின்றிக் கவலைப்படுகின்றார்கள். இவர் குடும்பத்தில் ஒரே ஒரு ஆண் மகனானபடியாலும் அவர்களுக்கு மிகவும் வேண்டியவராக இருக்கின்றார். இவர் எவ்வித தவறுகள் செய்திருப்பினும் இளைஞர்கள் தமிழ் அன்னையின் அன்புடனும் பண்புடனும் சிவநேஸ்வரனுக்கு பொதுமன்னிப்பு வழங்கி ,விடுதலைசெய்யுமாறு அல்லது உயிர்ப் பிச்சை கொடுத்து எங்கோ வாழவைக்குமாறு மன்றாட்டமாக வேண்டுகின்றோம்.

பெற்றோர், சகோதரிகள்,
ஈவினைபொதுமக்கள்.

ஈவினை
புன்னாலைக்கட்டுவன். 4329

---

## மரண அறிவித்தல்

### வண. பிதா S. P. அல்பிரட்

வண. பிதா S. P. அல்பிரட் காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை வியாழக்கிழமை 11-ம் திகதி காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் புனித மரியாள் பேராலயத்தில் நடைபெறும்.

4334

---

## மரண அறிவித்தல்

### திருமதி மேரி யோசேப்பின் அத்தனுசியார் காலமானார்

இவர் காலஞ்சென்ற சில்லாலை சுதேச வைத்தியர் சுவாம்பிள்ளை அத்தனுசியார் அவர்களின் அன்புமனைவியும், வைத்தியகலாநிதி பாக்கியநாதர் அத்தனுசியார், வைத்தியகலாநிதி அல்போன்சஸ் அத்தனுசியார் காலஞ்சென்ற தார்க்கம்மா யோசவ், காலஞ்சென்ற திரேசம்மா அந்தோனிப்பிள்ளை, ஜெட்றூட், லீமாறேஸ், றீற்றூ, மேரி இவர்களின் அன்புத்தாயாரும், திருமதி பேளி அத்தனுசியார், காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை யோசவ், காலஞ்சென்ற பெனடிக்ற் அந்தோனிப்பிள்ளை, கிளரன் செல்லையா, திருமதி வசந்தா அத்தனுசியார், பஸ்ரியன் டேவிட், லோறன்ஸ் யோசவ் பெனடிக்ற் இவர்களின் அன்புமாமியாருமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை சில்லாலையில் புதன்கிழமை 10ம் திகதி இன்று பி. ப. 3-30 மணிக்கு நடைபெறும்.

4323

---

## மரண அறிவித்தல்

### திருமதி L. S. நல்லதம்பி

திருமதி லிசி சின்னத்தங்கம் நல்லதம்பி (இளைப்பாறிய ஆசிரியை) 84வது வயதில் மறுமைக்குள் பிரவேசித்தார். இவர் காலஞ்சென்ற J P. நல்லதம்பி (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் திரு W N தேவகடாட்சம் (அதிபர் பிரதம பாடசாலை யாழ்ப்பாணக் கல்லூரி), திருமதி G. T. பொன்னையா (ஆசிரியை வத்தாறுமூலை), திருமதி C K பொன்னையா (ஆசிரியை பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி தவமணி தேவகடாட்சம் (இளைப்பாறிய ஆசிரியை), திரு A. N. பொன்னையா (இளைப்பாறிய அதிபர்), காலஞ்சென்ற J N. பொன்னையா (ஆசிரியர் பருத்தித்துறை) ஆகியோரின் மாமியாருமாவர். அன்னாரின் பிரேதசேம ஆராதனை 8-7-85 மாலை 4-00 மணியளவில் பருத்தித்துறை இல்லத்தில் அருள்திரு S S கருணராசா அவர்களால் நடாத்தப்பட்டது நாட்டு நிலைமை சீராக இல்லாத காரணத்தால் அறிவிக்கமுடியாததையிட்டு மனம் வருந்துகின்றோம்.

தவமனை, நவாலி,
மானிப்பாய் W. N. தேவகடாட்சம்

4328

---

## மரண அறிவித்தல்

### ஜெகதீஸ்வரன் பேபி சுகன்யா

ஜெகதீஸ்வரன் மகேஸ்வரி தம்பதிகளின் புதல்வியான பேபி சுகன்யாவின் பூதவுடல் 43, சோதிவேம்படி ஒழுங்கை, மனிப்பாய் இல்லத்திலிருந்து 11-7-85 வியாழக்கிழமை நாளை மாலை 3 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக பிப்லி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

43, சோதி வேம்படி ஒழுங்கை,
4335 மானிப்பாய்.

---

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை - முருகையா

(கீரிமலை)

கீரிமலையைச் சேர்ந்த ஐயாத்துரை-முருகையா காலமானார் இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், விசாகபெருமாள், திருமதி அகிலாம்பிகை, திருமதி இராசேஸ்வரி, தம்பித்துரை ஆகியோரின் அருமைத் தந்தையாரும், சுப்பிரமணியம், அப்புத்துரை, இராசாவின் சகோதரனுமாவர். அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 10-7-85 புதன்கிழமை இன்று 2 மணிக்குநடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி மிகவும் பணிவுடன் வேண்டப்படுகின்றனர். தகவல்:

மு. ஐயாத்துரை

"தாய் அம்பாள் இல்லம்",
கே. கே. எஸ். றோட், கீரிமலை. 4332

---

## மரண அறிவித்தல்

### பொன்னையா தம்பித்துரை

(வேலணை)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வேலணையில் வசிப்பவருமாகிய பொ. தம்பித்துரை காலமானார். அன்னார் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், பத்மநாதன், ரஞ்சிதமலர் (ஆசிரியை, சரஸ்வதி வித்தியாசாலை, வேலணை) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலச்சந்திரன் (றியாட்), ராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், சுஜேனின் அன்புப் பேரனும், தம்பிஐயா, ராசு, அமிர்தம், சிவக்கொழுந்து, நலலம்மா, ராசலெட்சுமி ஆகியோரின் சகோதரரும், நாராயணசுவாமி (பிலிப்பைன்ஸ்), சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-7-85 இன்று புதன்கிழமை பி. ப (3) மூன்றுமணிக்கு வேலணையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

4333 தகவல்: பொ. த. பத்மநாதன்.

---

## மரண அறிவித்தல்

### மேரி சூசன் கிறிசோஸ்ரம்

மன்னாரைச் சேர்ந்த மேரி சூசன் கிறிசோஸ்ரம் காலமானார் இவர் காலம்சென்ற S கிறிசோஸ்ரம் அவர்களின் மனைவியும், (B) பிறிற்றோ, மேபல் சேவியர், மிலிசென்ற் செல்வநாயகம், வண. ஜோய் அடிகளார், ஐடா செல் ஜோர்ச், பேசி ஆகியோரின் அன்புத் தாயாரும், பூபாக்கியம் தம்பையாவின் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை (10-7-85) மாலை 4 மணிக்கு பரி. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

19, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

4327

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜுலை மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 ,24126,